
# போர்வாள்

“என்ன இப்படி ஊதிவிட்டீரே!”




காமராஜர் சென்னை மந்திரிசபைக்கு மேலும் மேலும் புதுப்புது மந்திரிகளைச் சேர்த்துக்கொண்டே இருக்கிறார், ஆனால் மந்திரி சபையோ ஏற்கெனவே அளவுக்கு மீறிப் பெருத்துப்போய் இருக்கிறது! அது அனைவருக்கும் தெரிகிறது. ஆனால் காமராஜருக்கு மட்டும் தெரியவில்லை. அவர் கூறுகிறார் மந்திரிசபை இன்னும் கொஞ்சம் விரிவடையத்தான் வேண்டும் என்று!

வாள் 2
வீச்சு 35
ஆசிரியர்கள்:
காஞ்சி, மணிமொழியார்.
இரா. இளஞ்செழியன், B.A. HONS.
அ

Best copy available.




தொடர்கதை :

முதற்பகுதி

## செந்தமிழ் வாழ்க !

பரந்து உயர்ந்த மாமலை! அதனைச் சுற்றிலும் அடர்ந்து விரிந்த காடு! வான்முட்டவளமாக வளர்ந்திருந்த நானாவிதமான பயன்தரும் மரங்கள்! தித்திக்கும் தேன் கனிகளைச் சுமந்து கொண்டிருந்த பலா மரங்கள்! இன்பச் செந்தமிழின் இனிமையைப் போல் சுவைமிக்க பழங்கள் குலுங்கும் மாமரங்கள்! தேய்ந்து கூழாகி, கன்னியரின் பொற்கரத்தில் ஓடி, மணம் கமழக் காத்திருந்த சந்தன மரங்கள்! மலர்ந்து வாசனையை வான் வெளியில் அள்ளி வீசும் காட்டு ரோஜா மலர்கள்! காட்டில் எளிதில் எவரும் நுழையாதபடி கை விரித்து காவல் புரிந்துவந்த காரைச் செடிகள்! அப்பணிக்கு உதவி அளித்த சூரைச் செடிகள்! கற்கண்டுபோல் இனிக்கும் தமிழ்ப் பெருங் காவியங்களின் தெளிந்த தன்மையையும், அவற்றின் சீரிய ஓட்டத்தையும் நினைப்பூட்ட, சலசலப்பு ஒலிசெய்து ஓடும் காணாறு!

இவ்வளவு இயற்கை எழில் மிக்க காட்டினுள் சேரமன்னனும், அவனது பரிவாரமும் வில், வேல், வாள் ஏந்தி வேட்டையாட நுழைந்தனர். அவர்களது காலடிச் சப்தத்தைக் கேட்டு, செடிகளின் அடர்ந்த பகுதிகளில் மறைந்திருந்த காடையும் கௌதாரியும் பறந்தோடின! வீரரின் வில்களிலிருந்து அம்புகள் பறந்தோடின! வாளும் வேலும் கொடிய மிருகங்களின் உடலில் நுழைந்து உதிரத்தையும் உயிரையும் வெளியே கொட்டச் செய்தன! வீறிட்டுச் சிதைந்து ஓடி வந்த வேங்கைகள் அம்பு தைத்து ஆவிபிரிய அலறி வீழ்ந்தன! சீறிட்டுப் பாய்ந்து வந்த சிறுத்தைகள் கணைபட்டுச் சாய்ந்தன! உரு அறுபட்ட சிங்கங்கள் தரையில் உருண்டன! இரத்த ஆற்றில் புலிகள் மிதந்தன!

மன்னன் ஆட்களின் வீர விளையாட்டால் காடு அதிர்ந்தது. காணாறு கலங்கியது! காட்டுப்பன்றிகள் தம் குட்டிகளோடு உறுமிக் கொண்டு புதருக்குள் ஓடிப் பதுங்கின! கண்டதை அடித்துத் தின்னும் கருஞ்சிறுத்தைகள் காற்ருய்ப் பறந்தன! மான் கூட்டம் மிரண்டோடியது! மந்திகள் அச்சத்தால் கிளைக்குக் கிளை தாவியபடி இருந்தன! பயந்து கூவி, சிறியபெரிய பறவைகள் அனைத்தும் பறந்தோடின. சரமாரியாகப் பாய்ந்து சென்ற கணைகள் சிறிது சிறிதாக ஓய்ந்தன!

வேட்டையாடி கொடிய மிருகங்களை நாசம் செய்ததனால் வேந்தனின் உள்ளம் குளிர்ந்தது. வீரர்கள் ஓய்வெடுத்துக் கொண்டனர். **வீரன் தூயமணி** தன் வலது தோளிலிருந்து வழிந்த இரத்தத்தைத் துடைத்துக் கொண்டிருந்தான். அதனை மன்னன் பார்த்து விட்டான். அவனது கண்கள் அகல விரிந்தன!

"தூயமணி, இப்படி வா!" என்ருன் அரசன்.

தூயமணி எழுந்து அருகில் வந்தான். அவனது உயர்ந்து பெருத்த தோள்களிலிருந்து உதிர்ந்த உதிரத்தை மன்னன் தன் கைகளால் துடைத்தான்.

"எப்படி காயம் ஏற்பட்டது?" என்று பரிவோடு அரசன் கேட்டான்.

தூயமணியின் உதடுகளிலிருந்து முதலில் புன்னகையும் பிறகு வார்த்தைகளும் உதிர்ந்தன!

"வேந்தே, வேல்கொண்டு வேங்கையின் உடலைப் பிளந்த நேரத்தில், அதன் நீண்ட நகம் தவறிப்பட்டுவிட்டது............சொற்ப காயம் தான்!"

அப்பொழுது அப் பக்கமாக ஓடிய மான் குட்டி ஒன்று மன்னனின் கவனத்தை இழுத்தது! உடனே தன் அன்பு மகள், சேரவம்சம் செழிக்கத் தோன்றிய ஒரே ஒரு புதல்வி இளவரசி வஞ்சியின் நினைவு வரவே, அரசன் தூயமணிகயைப் பார்த்தான்!

"வீரா, அதோ வெகு வேகமாகத் துள்ளி ஓடுகிறதே புள்ளி மானின் குட்டி அதனைப் பிடித்துக் கொண்டு வருகிருயா?"

"நம் ராணியாருக்கு மான் என்ருலே உயிர்—அவ்வளவு ஆசை! சென்ற முறை நாம் வேட்டையாடி திரும்பிய போதுகூட........."

"மான் குட்டி பிடித்துக்கொண்டு வரவில்லையே என்று வஞ்சி கோபித்துக் கொண்டாள்........"

வஞ்சி என்ற பெயரைக் கேட்டதும் தூயமணியின் முகத்தில் சுருக்கமேற்பட்டது!

"இளவரசியாம்— இளவரசி! பெண்தானு அவள்? காமவெறி பிடித்தவள்! சே! நற்பண்பு மிக்க ராணியாருக்கு இவள் எப்படி மகளாகப் பிறந்தாள்!......" இப்படி தூயமணி தன் உள்ளத்திலேயே பேசிக் கொண்டான்.

"தூயமணி; என்ன யோசிக்கிருய்? காற்று வேகத்தில் ஓடும் அதனை எப்படிப் பிடிப்பது என்ற சந்தேகமா?"

"இல்லை அரசே! கணைவேகத்தை விட என் கால் வேகம் அதிகம்...,"

"அதனை நான் அறிந்ததனுல் தான்—இப்பணியை உனக் கிட்டேன்"

"இதோ பிடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்!"

வீரன், மான் குட்டியைத் துரத்திக்கொண்டு சென்ருன்! காட்டில் நீண்ட தூரம் ஓடி, கால் ஓய்ந்து ஓர் புதருக்குள் அது பதுங்கியதும் அதனை அவன் பிடித்துக்கொண்டான்.

"கள்ளங் கபடமற்ற பார்வையைக் கொண்ட இந்தச் சின்னஞ் சிறு மான்குட்டி, இளவரசி வஞ்

யின் கைபட்டால்—இதன் பண்பே பாழ்பட்டுவிடுமே...'' என்றெண்ணினான் தூயமணி!

மன்னனின் கட்டளை — அதனை எப்படி அவனால் தட்ட முடியும்?

மான் குட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். வேட்டையாடி வியர்த்த உடலில் மெல்லெனத் தழுவிய தென்றலால் இன்பமடைந்தான்! காட்டு மலர்களின் மணத்தால் உள்ளம் பூரித்தது!

நடந்துகொண்டு வந்தவன் திடீரென்று நின்றான்! அவன் காதையும் கண்ணையும் அந்நேரத்தில் அவனால் நம்ப முடியவில்லை!

விரிந்த விழிகளோடு பார்த்தான்! ஒரு பெரிய பாறையின் மீது ஒரு கிழவன் நின்றுகொண்டிருந்தான்! அந்தக் கிழவன் கூறிக்கொண்டிருந்ததை உற்று உற்றுக் கேட்டான்! அவனுக்குக் கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது. போர்வாள் ஏந்தி ஏந்திப் பழக்கப்பட்ட அவன் கை துடி துடித்தது! அவனைக் கிழித்து சின்னாபின்னமாக்கி கழுகுக்கும் காகத்திற்கும் இரையாக்க வேண்டுமென்று எண்ணினான்!

மான்குட்டியை மார்பில் அணைத்துக்கொண்டு மிக வேகமாகக் கிழவன் அருகில் சென்றான். தூயமணி அருகில் வந்து நின்றதையும் கவனியாது, "அரசே நீ அழிக! உன் அரசு கவிழ்க! அரசே நீ அழிக! உன் அரசு கவிழ்க! அரசே நீ அழிக! உன் அரசு கவிழ்க!... ........" என்று கிழவன் திரும்பத் திரும்ப அதனையே கூறிக்கொண்டிருந்தான்!

"மூர்க்கா, மூடு வாயை!" என்று வீரன் அச்சமூட்டும் குரலில் கர்ஜித்தான்! அலட்சியத்தோடு அவனைத் திரும்பிப் பார்த்தான், கிழவன்! சிரித்தான், அடுத்த விநாடியில் அவன் முகம் விகாரமாக மாறியது!

"அரசே நீ அழிக! உன் அரசு கவிழ்க!......" திரும்பவும் கிழவன் இப்படிக் கூறத் தொடங்கினான்.

தூய மணிக்குக் கட்டுக்கடங்காக் கோபம் உண்டாகிவிட்டது! கிழவனை அடிக்கக் கையைத் தூக்கினான்! விலகிய கையிலிருந்து விடுபட்டு மான் குட்டி தப்பி ஓடியது! மான்குட்டி தப்பி ஓடிவிட்டதைக் கண்டதும் வீரன் அசைவற்று நின்றுவிட்டான். என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை.

நாட்டின் காவலனை நாவிற்கு வந்தபடி தூற்றும் கயவனைத் தண்டிப்பதா? அன்றி மன்னனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய, தப்பிய மான்குட்டியைத் துரத்திப் பிடிப்பதா? விரைவாக ஒரு முடிவிற்கு அவனால் வரமுடியவில்லை!

கிழவன் விடாது தான் சொன்னதையே சொல்லிக்கொண்டிருந்தான்!

"இதனையே மறுபடியும் சொன்னால் உன் நா அறுபடும்!......" என்று வீரன் ஆத்திரத்தோடு கூறினான்.

சாந்தம் நிறைந்த பார்வையை அவன் மீது கிழவன் வீசிவிட்டு, "தம்பி, ஏன் கோபமாக என்னிடம் பேசுகிறாய்? உனக்கு என்ன கேடு செய்தேன்!" என்றான்!

"எம் மன்னனை அழியும்படி ஏன் கூறுகிறாய்?" பதட்டத்தோடு வீரன் வினவினான்!

"இது உனக்குப் புரியவில்லையா?"

"எனக்குப் புரிகிறது, நீ அய நாட்டு ஒற்றன் என்ற உண்மை!"

"அல்ல அல்ல! செந்தமிழ் சிரித்து, வளர்ந்து, சிம்மாசனத்தில் வீற்றிருந்த சேரநாட்டு மகன் நான்!"

"சேர நாட்டு மகன்—உனக்கு வெட்கமில்லை இதனைக் கூற......"

"ஆம் தம்பி வெட்கமாகத்தான் இருக்கிறது. வெட்கம் மட்டுமல்ல வேதனையும் என் உள்ளத்தைக் கசக்குகிறது!......"

"போதும்வீணாக ஏதேதோ பிதற்றாதே!...அரசன் அழிக என ஏன் கூறினாய்? மறைக்காமல் உண்மையைக்கூறு."

"நாட்டு மக்கள் வாழ்வு பெற அப்படிக் கூறினேன், தம்பி!"

"என்ன?"

"ஆமாம் தம்பி, இதுதான் உண்மை!"

தூய மணி கோபங் கொண்டு கிழவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். "செந்தமிழ் வாழ்க!" என்று கூறிக்கொண்டே கிழவன் நினைவு இழந்து கீழே சாய்ந்தான்!

கிழவனின் பரிதாபகரமான நிலையைக் கண்டதும், தூய மணியின் உள்ளத்திலிருந்த ஆத்திரம் மறைந்து விட்டது. அனுதாபம் பிறந்தது. பாறையை விட்டுக் கீழே இறங்கினான்! வேகமாக ஓடி கானாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, கிழவன் முகத்தில் தெளித்தான்.

கிழவன் எழுந்து உட்கார்ந்தான்! வீரன் அவனை உற்றுப்பார்த்தான். அவன் முதுகில் ஒரு பெரிய புண்! அதிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டே இருந்தது!

"இவ்வளவு பெரிய புண்ணா?" என்று வாய்விட்டு ஆச்சரியமும் கலக்கமும் மிக்க குரலில் தூயமணி வினவினான்!

"பெரிய புண்!—இதுதான் சேர நாட்டு வரலாறு தம்பி!"

"பெரியவரே! எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

"புரிந்திருந்தால், இந்தத் தள்ளாத கிழவனின் கன்னத்தில் அடித்திருப்பாயா?"

"என்னை மன்னிக்க வேண்டும்! ஆத்திரத்தால் அப்படி செய்துவிட்டேன்......இந்தப் புண்......"

"செந்தமிழ் வாழ்க என்றேன்—அதற்கு இது பரிசு, தம்பி!"

"விசித்திரமாக இருக்கிறதே!"

"விசித்திரம் என்கிறாய்! என் கதையைக் கேட்டால் இரத்தக் கண்ணீர் அல்லவா கசிவாய்!..." என்று கூறிக்கொண்டே கிழவன் பாறையைவிட்டுக் கீழே இறங்கினான்; நடந்தான். தூயமணியும்பின் தொடர்ந்தான்.

"அய்யா!"

"என்ன?"

"அதனை விவரமாகச் சொல்ல.."

"என்னுடனேயே நீ வரவேண்டும்!"

"மன்னன் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்!"

"எனக்காக வேறொரு கிழவர் குகையில் காத்துக்கொண்டிருப்பார், நானும் போகவேண்டும்!" என்று கூறிவிட்டு கிழவன் நடந்தான்.

"மன்னனிடம் செல்வதா? அன்றி, செந்தமிழ் வாழ்க என்றதற்குப் புண் பரிசு பெற்ற வரலாற்றை அறிய இக்கிழவனைப் பின் தொடர்வதா?" என்று யோசித்தான் தூயமணி.

அவன் கால்கள் மட்டும் கிழவன் சென்று கொண்டிருந்த திசை நோக்கி நடந்து கொண்டிருந்தன!

(தொடரும்)

# ஏன்? எப்படி? எதற்காக?

[இளஞ்செழியன்]

[திராவிடர் கழக இலட்சியம், கொள்கை, நடைமுறை, திட்டம், போக்கு, தென்னாட்டு அரசியல்—பொருளியல்—சமுதாய இயல் நிலைமை, பொதுவாக இந்திய அரசியல் தன்மை ஆகியவை பற்றிய ஐயவினாக்களுக்கு இந்தப் பகுதியில் வாரந்தோறும் விடை அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்களின் சொந்த நலனை முன்னிட்டே, பத்திரிகையில் அவர்களின் பெயர்களை வெளியிடாதிருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.]

**1. உலக உத்தமர் காந்திஜியை மகாத்மா என்று அழைப்பது மூட நம்பிக்கை என்று பிரசாரம் செய்துவந்த நீங்கள் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரை மட்டும் பெரியார் என்று அழைக்கிறீர்களே, அது மூடநம்பிக்கை அல்லவா?**

அல்ல, நண்பரே, அல்ல! ஒருவரை மகாத்மா என்று அழைப்பதற்கும், அவரையே பெரியார் என்று அழைப்பதற்கும் இடையே மகத்தான வித்தியாசம் இருக்கிறது. மகாத்மா என்ற சொல் மகா + ஆத்மா என்ற இரு சொற்களின் கூட்டு. ஆத்மா என்பது, மதவாதிகளின் கருத்துப்படி, நம் உடலுக்குள்ளே இருந்து நம் உடலை இயக்குவது! அது இந்த ஜென்மத்தோடு பிறந்து இந்த ஒரு ஜென்மத்தோடு அழிவதல்லவாம். நாம் இதற்கு முன்னால் புல்லாய்ப் பூண்டாய்ப் புழுவாய் நாயாய் எருமையாய் கழுதையாய் புலியாய் பாம்பாய் குரங்காய் எத்தனையோ ஜென்மங்கள் எடுத்து பூர்வ ஜென்மங்களில் செய்த புண்ணியத்தின் காரணமாக இப்போது மனித ஜென்மம் எடுத்திருக்கிறோமாம்! ஜென்மத்திற்கு ஜென்மம் இதுபோல உடல்வடிவம்தான் மாறி இருக்கிறதே தவிர நம் ஆத்மா அப்படியேதான் அழியாமல் இருக்கிறதாம்! இனியும் நாம் இந்த ஜென்மத்தில் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப நம் ஆத்மா பல ஜென்மங்கள் எடுக்கு மாம்! நம் ஆத்மா மகா ஆத்மாவாக இருந்தால், அதாவது புண்யாத்மாவாக இருந்தால் இனி நமக்கு ஜென்மங்களே இல்லாமல் போய் ஆண்டவனின் திருப்பாத கமலங்களோடு நம் ஆத்மா இரண்டறக் கலந்து விடுமாம்! பிறகு பிறவியே எடுக்காதாம்! இவ்வளவு முட்டாள்தனமான வாதங்கள் அவ்வளவையும் ஒப்புக்கொள்ளும் மேதாவிகள்தான் ஒருவரை மகாத்மா என்று கூற முடியும்! ஆனால் பெரியார் என்ற சொல்லிலே இத்தகைய மூடநம்பிக்கைக் கருத்துகளோ, பூர்வபுண்ணியத்திற்கேற்ப ஆத்மா ஜென்மம் எடுக்கும் என்ற எண்ணமோ, ஏனைய மதத் தத்துவங்களோ அணுவளவும் கிடையாது. செயற்கரிய செய்தவர் பெரியார். அவ்வளவுதான்! தலைவர் ஈ. வெ. ரா செயற்கரிய பணி பல செய்திருக்கிறார். தென்னாட்டில் ஏன், இந்தியாவிலேயே இதுவரை எத்தனையோ நூற்றாண்டுகளாக எத்தனையோ "மகான்"களால் "தீர்க்கதரிசி"களால் "மகாத்மா"க்களால் ஞானிகளால் யோகிகளால் அறிஞர்களால் சாதிக்க முடியாத பல அற்புதமான சாதனைகளை அவர் ஒரு முப்பது ஆண்டுக் காலத்தில் செய்து காட்டியிருக்கிறார். எனவேதான் அவரைப் பெரியார் என்றழைக்கிறோம். உத்தமர் காந்தியாரும் பல செயற்கரிய காரியங்களைச் செய்திருக்கிறார். எனவேதான் அவரையும் உலகப் பெரியார் என்று பணிவுடன் கூறி வருகிறோம். **உலகப் பெரியார் காந்தி** என்ற தலைப்பில் அறிஞர் அண்ணாதுரையின் புத்தகம் வெளிவந்திருக்கிறதே, கண்டதில்லையா நீர்?

**2. இந்தி கட்டாயமாக்கப்பட்டபோது "கட்டாய இந்தியை ஒழித்தன்றி ஓய மாட்டேன்" என்று இடிமுழக்கம் புரிந்தாரே கிராமணியார்! அதற்குப் பிறகு இந்தி எடுபட அவர் எத்தகைய முயற்சிகளும் செய்யக் காணோமே, ஏன்?**

அருமையான கேள்வி! ஆனால் கேட்கப்படவேண்டிய இடம்தான் வேறு! நான் சிவஞான கிராமணி அல்லவே இதற்குப் பதில் கூற—என் பெயர் இளஞ்செழியன்!! நீங்கள் இதே கேள்வியை நண்பர் சிவஞானத்தைக் கேட்டு, அவரும் மனம் திறந்து பதில் கூறுவாரானால் (கூறமாட்டார், கூறினால்) அந்தப் பதில் இதுவாக இருக்கும்:—"நான் இந்தியை எதிர்க்க ஆரம்பித்தபோது இந்தியை எதிர்ப்பதன்மூலம் என் செல்வாக்கு வளரும் என்றெண்ணினேன் ஆனால் பிறகோ திராவிடர் கழக செல்வாக்கே வளரக் கண்டேன். எனவே நான் எப்படி அதற்குப் பிறகும் இந்தியை எதிர்க்க முடியும்? என் நோக்கமென்ன உண்மையில் இந்தியை எதிர்க்கவேண்டும் என்பதா?'

**3. தோழர் சி. என். அண்ணாதுரையை தளபதி என்று அழைக்கிறீர்களே, அவர் எந்தப் பட்டாளத்திற்குத் தளபதி? எப்போது முதல்?**

பெரியார் பெரும் படைக்கு! அந்தப் படையினர் உள்ளத்தை அவர் அள்ளிக்கொண்ட நாளிலிருந்து!

**4. திராவிடக் கழகத் தோழர்கள் சில சமயம் தங்களைத் தமிழன் என்று சொல்லிக் கொள்கின்றனர்! சில சமயம் திராவிடன் என்று சொல்லிக் கொள்கின்றனர்! ஒன்று அவர்கள் தமிழர்களாய் இருக்க வேண்டும் அல்லது அவர்கள் திராவிடர்களாய் இருக்கவேண்டும்! ஒரே சமயத்தில் எப்படி அவர்கள் இரண்டுமாக இருக்கமுடியும்? ஏதாவது மாயாஜாலம் தெரிந்தவர்களோ அவர்கள்?**

அதெல்லாம் ஒன்றுமில்லை! நீர் ஒருவர்தானே! ஆனால் நீரே

'மகன்' ஆக இருக்கிறீர் உம் அம்மாவுக்கு! 'அண்ணன்' ஆக இருக்கிறீர் உம் தம்பிக்கு! 'தம்பி'யாக இருக்கிறீர் உம் அண்ணனுக்கு! அப்பாவாக இருக்கிறீர் உம் பிள்ளைக்கு! மாமாவாக இருக்கிறீர் உம் மச்சானுக்கு! மச்சானாக இருக்கிறீர் உம மாவுக்கு! எப்படி ஐயா உம் ஒருவராலேயே இத்தனை வடிவங்களும் எடுக்க முடிகிறது? அப்படித்தான் நாங்கள் **தமிழர்கள்**—தமிழ் **மொழியைத்** தாய்மொழியாகக் கொண்ட காரணத்தால! **திராவிடர்கள்**—திராவிட **இனத்தில்** பிறந்த காரணத்தால்! **இந்தியர்கள்**—இந்தியக் கண்டத்தில் வாழும் காரணத்தால்! **ஆசியாக்காரர்கள்**—ஆசியாவில் இருப்பவர்கள் ஆதலால்! **உலகமனிதர்கள்**—உலகத்தில் இருப்பதால்! ஒரே சமயத்தில் நாம் தாராளமாக தமிழர்களாகவும் திராவிடர்களாகவும் இருக்கமுடியும்! மொழிவழியாகப் பார்க்கும் போது நாம் தமிழர்கள்! இனவழியாகப் பார்க்கும்போது திராவிடர்கள்! இன்னமும் சந்தேகமா உமக்கு? அப்படியானால் உம் தாயாரைப் போய்க் கேளும் "என்னம்மா இது, நீங்கள் என்னை மகனே என்றழைக்கிறீர்கள்! என் பிள்ளை அப்பா என்றழைக்கிறான்! நான் எப்படியம்மா ஒரே சமயத்தில் மகனாகவும் அப்பாவாகவும் இருக்க முடியும்?" என்று! நல்ல பதில் கிடைக்கும்!

### 5. திருவள்ளுவர் ஆஸ்திகர் அல்லவா? ஆம் எனில் எதற்காக நாஸ்திகராகிய பெரியார் திருவள்ளுவரைப் போற்றுகிறார்?

இந்தக் கேள்விக்குப் பதில் வேண்டுமானால் நான் கேட்கும் கேள்விக்கு நீவிர் பதில் கூறியாக வேண்டும்; ஆஸ்திகர் என்றால் யார்? மனம் மொழி ...ய் மூன்றிற்கும் எட்டாத, அப்பாலுக்கு அப்பாலாய் அப்பாலும் ஓர் சூனியமாய் இருக்கின்ற, இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்ட ஒண்ணாத ஏதோ ஒருபரம்பொருளை மறுக்காதவரா உம் அகராதிப்படி ஆஸ்திகர்? ஆம் என்றால் அத்தகைய ஆஸ்திகர் தான் பெரியார்! நாஸ்திகர் என்றால் யார்? பல கடவுள் வணக்கம் கூடாதென்பவர், உருவ வழிபாடு வேண்டாம் என்பவர், கடவுளுக்கு பெண்டு பிள்ளை வைப்பாட்டி மூப்புப் பிணி சாக்காடு காமக்களியாட்டுக் கதைகள், புராணங்கள் ஆகியவற்றைக் கற்பிப்பது தவறு என்பவர், உற்சவங்கள் வாகனாதிகள் தேர் திருவிழாக்களை தண்டச் செலவு என்பவர் ஆகியோர்தானே நாஸ்திகர்? அப்படியானால் திருவள்ளுவரும் நாஸ்திகர் தான்! இப்போது நீரே கூறும், பெரியார், திருவள்ளுவரைப் போற்றுவது நியாயமா அல்லவா?

### 6. நாஸ்திகம் பேசுகின்ற காரணத்தால்தான் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் குழந்தை பிறக்கவில்லை என்று கூறுகிறார்களே, அது உண்மையா?

உண்மை அல்ல, கலப்பற்ற பொய்! அண்ணாவுக்குக் குழந்தை உண்டு! பெயர் பரிமளம்! வயது ஏழு அல்லது எட்டு இருக்கும்! பரிமளம் பதிபபகம் என்ற நூல் வெளியீட்டகம் ஒன்று துவக்கியிருக்கிறாரே அண்ணா. அந்தப் பதிப்பகத்தின் பெயரில் பரிமளம் என்றிருப்பது அவர் மகனைக் குறிப்பதுதான். பெரியாருக்கும் குழந்தை பிறக்கவில்லை என்பதும் பொய். அவர் தோழியர் நாகம்மையாரை மணந்த இரண்டே ஆண்டுகளில் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது!

அதிருக்கட்டும் நண்பரே, நாஸ்திகம் பேசியதால்தான் இவர்கள் இருவருக்கும் குழந்தை பிறக்கவில்லை என்று கூறுகிறீரே, அப்படியானால் ஆஸ்திகம் பேசுபவர்கட்கெல்லாம் மட்டும் குழந்தை கட்டாயம் பிறந்துவிடுகிறதா என்ன? எத்தனை ஆஸ்திக அம்மணிகள் பிள்ளை வரம் வேண்டி அரசமரத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்றனர்? அசல் ஆஸ்திகர்களாக இருந்தும் அவர்கட்குப் பிள்ளை பிறக்காதது ஏன்?

கடைசியில் ஒரு இரகசியம்! பிள்ளை பிறப்பதற்கும் பிறக்காமல் இருப்பதற்கும் ஆஸ்திகராகவோ நாஸ்திகராகவோ இருப்பதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை! அப்படியானால் பிள்ளை பிறப்பது எப்படி என்று கேட்கிறீரா? தனியாக வந்து கேளும் சொல்லுகிறேன்! பத்திரிகையில் எழுதக் கூடாது!

———

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய கழகம் இருக்கிறது? இது ஒன்றே போதாதா, தமிழ் நாட்டில் தமிழ்மொழி எவ்வளவு அழியும் நிலையில் இருக்கிறது என்பதை விளக்குவதற்கு" என்றும், "இத்தகைய நிலையில் உள்ள இத் தமிழ் நாட்டில், இந்தியை, பள்ளியில் மாணவர்களும், வெளியில் மற்றவர்களும் படிக்க வேண்டுமென்கிற நிலை ஏற்பட்டால், இப்பொழுது கொஞ்ச நஞ்சமுள்ள தமிழும் அழிந்துவிடும் என்று நாம் ஏன் பயப்படக்கூடாது?" என்றும், "இரண்டரை கோடி மக்கள் பேசும் தாய் மொழியாகிய தமிழை—தீந்தமிழை வேறொரு மொழி அழிப்பதென்றால் அதை என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது" என்றும், "இந்திய சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், இந்தியாவிலே பெரிய சாம்ராஜ்யங்களாக இரண்டே சாம்ராஜ்யங்கள்தான் இருந்திருக்கின்றன. ஒன்று அக்பர் சாம்ராஜ்யம், மற்றொன்று அசோகர் சாம்ராஜ்யம், இவ்விரண்டு சாம்ராஜ்யங்களிலும் தென்னாடு ஒதுங்கியே இருந்துவந்திருக்கிறது" என்றும், "அரசியல் காரணமாகச் சிலருக்குத் "திராவிட" என்ற சொல் பிடிக்காதிருக்கலாம், அதற்காக திராவிட நாகரிகத்தின் உயர்வைப் புறக்கணிக்க முடியாது" என்றுமெல்லாம் பேசியிருக்கிறீரே, அதைப் பத்திரிகையில் கண்டபோது உண்மையிலேயே நான் உள்ளம் பூரித்தேன். ஆனால் ஒரு சந்தேகம்! தாங்கள் திருச்சியில் பேசி இருக்கிறீரே இது போல, இது என்ன பெருங்காயம் இருந்த பாண்டம் பிறகும் கூட பெருங்காய வாசனை வீசிக்கொண்டிருக்குமே அது போல, முன்னாளில் எங்களிடம் இருந்த காரணத்தால், பழைய

(12-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 சித்திரை 18
30—4—49 சனிக்கிழமை

# புயலில் சிக்கிய படகு!

வெண்ணிலா, வானத்தில்! கடலிலோ, அலை ஓசை! எழுந்தும் விழுந்தும் நிமிர்ந்தும் படுத்தும் ஓடியும் ஆடியும் குதித்தும் கூவியும் அலங்கார விளையாட்டுகள் புரியும் கடல் அலைகள் அழகிய நிலவொளியில் பட்டுத் தெறிக்கும் காட்சியோ அற்புதம்! இயற்கையின் இன்பமும் எழிலும் தம் முழு முகத்தையும் காட்டிப் புன்னகை புரியும் நேரம்! கவிஞர்களுக்குக் கரையிலாக் களிப்பையும் ஓவியர்கட்கு மட்டற்ற உற்சாகத்தையும் ஊட்டுகின்ற காட்சிகள்! இவ்வளவு இன்பச் சூழ்நிலைகளுக்கிடையே சிறுபடகு ஒன்று கடல் அலைகள் மீது ஆடி அசைந்தவண்ணம் அழகாகச் செல்கிறது. பால் நிலவு பட்டுத் தெறித்த கடல்மீது, படகு, பண்பாடிய வண்ணம் செல்லும் ஒய்யாரமே ஒரு தனியான அழகாகத்தான் இருந்தது. அந்த அழகை முழுவதாக 'ரசித்த' வண்ணம் முத்தமிழ்க் கவிதைகளை முழங்கிக்கொண்டே படகில் சென்றுகொண்டிருந்தனர் அந்க அரிய வாய்ப்புப் பெற்ற சிலர். முழு நிலவு! நீல நிறக்கடல்! ஒய்யாரமான படகு! அலாதியான ஓட்டம்! கவலையின்றி, களிப்புச் சிந்துபாடிய வண்ணம் பயணம்! இன்பத்தின் எல்லை இதுதானே!!

இன்ப புரிப் பயணம் நடந்துகொண்டே இருந்தது. அலைகடல் மீது படகு அழகாக ஓடிக்கொண்டே இருந்தது. உள்ளிருந்தவர்கள் யாவரும் உள்ளம் உருக்கும் தமிழ்ப் பண் பாடிக்கொண்டே இருந்தனர். அவர்களின் நெஞ்சமும் அந்தப் பண்ணுக்கேற்ற மௌனத் தாளம் போட்டுக்கொண்டே இருந்தது. வானிலே முழு நிலவும் தன் அரசாட்சியை முழுதும் பழுதற்ற முறைதனில் நடத்திக்கொண்டே இருந்தது. இன்பம் இன்பம் என்று கூவினர் படகில் இருந்தவர்கள். ஆம் ஆம் அப்படித்தான் என்று தன் ஒப்புதலைக் காட்டி உரக்கக் கூவிற்று கடல் அலை! பயணம் நன்று மிக நன்று என்றனர் படகில் சென்றவர்கள். உங்கள் பயணம் மட்டுமா என் பயணமும்தான் என்று புன்னகை பூத்த முகத்துடனே புதுமொழி கூறிற்று வெண்ணிலா! கடலரசனும் நிலவுப் பெண்ணுடன் அலை எனும் தூதுவன் மூலம் அடிக்கடி காதல் மொழிகளைப் பேசிக்கொண்டிருந்தான். ஆனந்தம் அதன் முழுப் பொருளையும் எடுத்து விளக்கும் அகராதியைத் தீட்டிக் கொண்டிருக்கும் அரிய காட்சிபோல் அமைந்திருந்தது இயற்கையின் அப்போதைய எழில்மிகு தோற்றம்.

திடீரென்று வெண்ணிலா மறைந்தது! கருமேகம் ஒன்று எங்கிருந்தோ வந்து கவ்விக் கொண்டோடி விட்டது நிலவுப் பெண்ணை! வானம் கருத்தது! இருள் பரவிற்று! கடல் அலைகள்மீது நடனமிட்டுக்கொண்டிருந்த ஒளிக் கதிர்கள் மறைந்தன! இருள்! இருள்! இருள்! எங்கும் ஒரே இருள்! திரும்பிப் பார்க்கும் இடமெல்லாம் இருள்! பயங்கரமான இருள்! கருத்த இருள் மேலும் மேலும் கருக்க ஆரம்பித்தது. அந்தக் கருக்கலின் பயங்கரத்தை அதிகமாக்குவதற்கென்றே வந்ததைப்போல புயல் வேறு வீசத் தொடங்கிவிட்டது. புயல் வீசுகிறது. சுழன்று சுழன்று வீசுகிறது. சண்டமாருதம் என வீசுகிறது. படகு அதோ ஆடுகிறது, ஆபத்தில் சிக்கி ஓடுகிறது, அதோ, அதோ, இப்புறமும் அப்புறமும் புயல் காற்றின் சக்தியால் தாக்குண்டு அலைகிறது; புயல் அதிகரிக்கிறது, படகு தத்தளிக்கிறது, உள்ளிருப்பவர்கள் கண்ணீர் சிந்துகின்றனர், கதறிக் கதறி அழுது அரற்றுகின்றனர், படகு கவிழ ஆரம்பிக்கிறது, இன்னும் ஒரு விநாடிதான், அதற்குள் மகத்தான உதவி, அற்புதமான துணை ஆச்சரியமான அளவில் கிடைத்தால் ஒழிய படகு கவிழ்ந்து, உள்ளிருப்பவர்கள் கடலில் மூழ்கி, அவர்களின் வாழ்க்கைத் தீபம் அணைவது உறுதி! ஆயிற்று, ஆயிற்று, படகு கவிழப் பார்க்கிறது. புயல் வீசுகிறது, படகு சாய்கிறது, இன்னும் ஒரு விநாடிதான், ஒரே ஒரு விநாடிதான், பிறகு........படகு கவிழ்ந்தே போய்விடும்! உள்ளிருப்பவர்கள் மாண்டே போய்விடுவர்! ஆனால் இன்னமும் ஒரு விநாடி இருக்கிறது. ஒரு விநாடி! ஒரே ஒரு விநாடி! அந்த விநாடிக்குள் உதவி எப்படியாவது எங்கிருந்தாவது வந்தால் படகும் படகில் இருப்பவர்களும் காப்பாற்றப்படுவர். உதவி கிடைக்குமா? ஒரு விநாடிக்குள் துணை வருமா? அவர்கள் காப்பாற்றப்படுவரா?

தெரியவில்லை! பதில் ஒன்றுமே தெரியவில்லை!

* * *

ஆடிப் பாடி ஆனந்தத்துடன் சென்று கொண்டிருந்த படகு அரைவிநாடி நேரத்தில் ஆபத்தான புயலிற் சிக்கி அடியோடு கவிழ்ந்து போகும் வேதனைமிகு சம்பவம்! ஆம்! அதுதான் கைத்தறி நெசவாளரின் பரிதாபகரமான வாழ்க்கை நிலைமை இன்று!

உலகப் போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில் அவர்கள் நிலைமை இன்பகரமானதாக இருந்தது. அவர்கள் நெய்து வந்த துணிக்கு கிராக்கி அதிகம்; மதிப்பு மிகுதி; 'மார்க்கட்' ஏராளம்! கூலி அதிகம் கிடைத்து வந்தது; வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை ஓரளவுக்கு நன்றாகத் தேடிக்கொள்ள முடிந்தது; சற்று சுகமாகவாழ முடிந்தது; வாழ்க்கை வாழ்க்கை என்று பேசுகிறார்களே பிறர், சுகம் சுகம் என்று ஜெபிக்கி

ஓ. எம். சுப்பிரமணியன்



ரூர்களே மேட்டுக்குடி மக்கள், இன்பம் இன்பம் என்று களிப்புடன் கூவுகிறார்களே "உயரப்பர்கள்," அந்த வாழ்க்கை என்றால், சுகம் என்றால், இன்பம் என்றால் என்ன என்பதை முதன்முதலாகச் சென்ற போர்க் காலத்தில்தான் கண்டறிய முடிந்தது அந்த "ஓடப்பர்"களால்! போர் முடிந்தது, ஏழை நெசவாளர்களின் வாழ்க்கையிலே இருந்து வந்த இன்பமும் முடிந்தது; அவர்கள் இல்லங்களிலே தவழ்ந்துவந்த சுகமும் மடிந்தது; இன்றோ, வேதனை அவர்கள் உள்ளத்தை வாட்டுகிறது. அவர்களுடைய வாழ்க்கைப் படகு பட்டினிப் புயலிலே சிக்குண்டு தத்தளிக்கிறது.

தென்னாட்டில் ஏறத்தாழ முப்பது லட்சம் பேர், கைத்தறி ஓடுகிறபோது பிறக்கிறதே கீதம் அந்தக் கீதத்திலே தம் வாழ்க்கை நாதத்தைக் காண்பவர்கள். அதாவது கைத்தறியை நம்பிப் பிழைப்பவர்கள். கைத்தறி ஒழுங்காக ஓடிக்கொண்டிருந்தால்தான் அவர்கள் வாழ்க்கை ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும். கைத்தறியிலே பிறக்கும் கீதம் ஓயாமல் தன் இன்ப நாதத்தை முழக்கிக்கொண்டிருந்தால்தான் அவர்கள் குடும்பம் எனும் கீதமும் இன்பம் எனும் சுருதியிலே சேர்ந்து ஒலித்த வண்ணம் இருக்கும். ஒரு சிலுப்பைக்குப் பின் மற்றொரு 'சிலுப்பை'யாக பூட்டுத்தலையில் நூல் ஏறிக்கொண்டே இருக்கவேண்டும், ஏற்றிக்கொண்ட நூலை வைத்துக்கொண்டு பூட்டுத்தலை சுழன்று கொண்டே இருக்கவேண்டும். சுழலும் பூட்டுத்தலையிலிருந்து நூல் "திரிவட்டத்"திற்கு மாறிக்கொண்டே இருக்கவேண்டும். திரிவட்டத்திலிருந்து தார்க்குச்சிக்கும் தார்க்குச்சியிலிருந்து தறியில் ஓடும் 'நாடா'வுக்கும் நாடாவிலிருந்து தறியில் விரிக்கப்பட்டிருக்கும் பாவுக்குமாக, நூல், தன் நீண்ட பயணத்தை விடாது நிகழ்த்திக்கொண்டே இருக்கவேண்டும், பாவிலே இக் குறுக்கு நூல் ஓட ஓட, 'தறிக்குண்டு' இப்படியும் அப்படியும் ஆட ஆட, வேட்டியோ சேலையோ எது நெய்யப்படுகிறதோ அது மேலும் மேலும் உருவாகிக்கொண்டே இருக்கும்; அதனை உருட்டி வைப்பதற்கான 'படை மரத்தில்' ஏறிக்கொண்டே இருக்கும், பிறகு தனியே அறுத்தெடுக்கப்பட்டு துணியாக (துணி என்றால் துணிக்கப்படுவது) வேட்டியாக (வேட்டி என்றால் வெட்டப்படுவது), புடவையாக (புடையப்படுவது அதாவது நெய்யப்படுவது) அடுக்கி வைக்கப்பட்டு, பிறகு, மார்க்கட்டிற்கு ஓடிவரும். 'பூட்டுத்தலை'யிலே ஏற்றப்படும் நூல் ஆடையாக உருமாறி 'மார்க்கட்'டுக்கு ஓடிவரும் வரையுள்ள இந்த நீண்ட பயணம் தங்கு தடையின்றி நடந்து கொண்டே இருக்கவேண்டும்—நடந்துகொண்டிருந்தால்தான் தறித் தொழிலாளியின் வாழ்க்கையும் தங்கு தடையின்றி நடந்து கொண்டிருக்கும். இல்லையேல் அவன் வாழ்க்கை பாலைவனமாகும்! குடும்பம், மனதை அரிக்கும் சங்கிலிப் புழுவாக மாறும்! இல்லம் வறுமையின் உறைவிடமாகத்தோற்றமெடுக்கும்!

இன்று, தென்னாட்டில் உள்ள இலட்சக்கணக்கான நெசவாளர்களின் வாழ்க்கை மலர்ந்த தாமரையாக இல்லை, உலர்ந்த சருகாக இருக்கிறது! 'அன்றலர்ந்த ரோஜா'வாக இல்லை- அழுகிப்போன வாழையாக இருக்கிறது! மந்த மாருதம் வீசும் குளிர் பூஞ் சோலையாக இல்லை—அள்ளுந் தணல் பரவிய கொடிய கானல் நிலமாக இருக்கிறது! அழகிய நீரோடையின் தோற்றம்போல் இல்லை-- அழுது வடியும் குழந்தையின் கசங்கிய முகம்போல் காணப்படுகிறது ஆம்! இன்று நெசவாளர்கள் வறுமைத் தோணியில் ஏறிக்கொண்டு பட்டினிக் கடலிலே மிதந்துகொண்டிருக்கும் வேதனை உருவங்களாகஇருக்கிறார்களேதவிர ஆநந்த வானிலே அழகுறத் திகழும் அரிய நட்சத்திரங்களாக இருக்கின்றார்களில்லை! அவர்கள் உள்ளம் உடைந்துபோய் இருக்கிறது; கண்கள் குளமாகி இருக்கின்றன; கன்னங்களோ நீரோடையாகி விட்டிருக்கின்றன. உடலோ வேதனையின் பிம்பமாக, இல்லாமையின் 'திருஉரு'வாக, ஏழ்மையின் வடிவமாக, அகோரப் பசியின் கோரத் தழும்புகள் நிறைந்த சடலமாக இருக்கின்றது. உண்மையிலேயே அந்த ஆயிரமாயிரம் நெசவாளர்களின் வாழ்க்கை கண்ணீர்க் கடலாகத்தான் இருக்கிறது இன்று! இதற்குக் காரணம் நாம் முன்னர் குறிப்பிட்ட 'நீண்ட பயணம்' ஒழுங்காக நடைபெறாததுதான். 'பூட்டுத்தலை'யிலே ஒரு 'சிலுப்பை' நூலை ஏற்றி அதனைத் திரிவட்டத்திலே 'இழைத்து' வைத்து விட்டால் பிறகு மறு சிலுப்பை நூல் கிடைப்பதில்லை — நூல்மார்க்கட் கையை விரிக்கிறது — சர்க்காரோ "கம்ப சர்க்கார்" எனவே இது பற்றியெல்லாம் கவனிப்பதில்லை— அந்த ஊமைகட்கோ பேச வாய் இருப்பதில்லை, பேசவே வாயில்லை என்றால் தங்கள் பரிதாப நிலைமையை முன்னிட்டுக் காட்டுக் கூச்சல் எழுப்ப அவர்களுக்கு எங்கே தெரிகிறது—காட்டுக் கூச்சல் எழுப்பா விட்டால் இந்த நாட்டில் எதுதான் நடக்கிறது—எனவே, பட்டினி, அந்தப் பரிதாபத்திற்குரிய பாட்டாளிகளிடம்வந்து, கூட்டாளி நான்தான் உங்கட்கு என்று நீட்டோலை வாசிக்கிறது. அந்த ஏழைகளோ 'சங்கம்' வைத்தறியாதவர்கள், கூட்டுக் கிளர்ச்சியின் மகத்துவம் தெரியாதவர்கள், கூட்டம் போட்டுக் குறைகளைத் தெரிவிக்க அறியாதவர்கள், மந்திரிகளைக் கண்டு மகஜர்களை நீட்டத் தெரியாதவர்கள், மறியல்—சத்தியாக்கிரகம்—சமர்—கிளர்ச்சி — சிறைவாசம் என்றெல்லாம் உண்டல்லவா ஜனநாயகப் போர் முறைகள் அவற்றைக் கையாள அறியாதவர்கள், கையாண்டால் தான் இந்நாளில் வாழ வழி பிறக்கும் என்பதையும் உணராதவர்கள், எனவே தங்களைப் பார்த்து மிரட்டும் பட்டினிப் பூதத்தைக் கண்டு நெஞ்சம் உடைந்து, கண்ணீர் வடித்து, தமக்குத் தாமே உள்ளம் புழுங்கித் தம்மிலே தாம் அவிந்து கிடக்கின்றனரே தவிர, தமக்கு நேரிட்டுவிட்ட இந்தப் பேராபத்தை அழித்து ஒழிப்பதற்காகப் பெருங் கிளர்ச்சி செய்தாக வேண்டுமே, செய்தால்தானே இந்தக் காருண்யமிக்க காங்கிரஸ் சர்க்கார் காதிலே நம் குறைகள் விழும் இல்லையேல் விழாதே—அவர்களுக்கு இருப்பது கேளாக் காதாயிற்றே என்பதை உணர்ந்தனரில்லை, உணர்ந்து உறுபணி ஆற்றினரில்லை, எனவேதான் அவர்கட்கு இத்தகு பேராபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள்கூட சரியாக உணர முடியவில்லை.

முப்பது இலட்சம் பேருக்கு உயிர் மூச்சுப் போன்ற ஒரு தொழில்—உயிர் மூச்சுப் போன்ற என்ன—உயிர் மூச்சாகவே இருக்கும் ஒரு தொழில், அந்தத் தொழில்,

(10-ம் பக்கம் பார்க்க)

# திறந்த மடல்

## தோழர் ஆர். கே. சண்முகம் கோவை.

அரசியல் விதவை என்று இந்நாளில் அழைக்கப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகி விட்ட எங்கள் முன்னாள் தளபதியே,

வணக்கம். யார் இவன் நம்மை உரிமையோடும் அன்போடும் ஆர்வத்தோடும் தோழர் சண்முகம் என்று அழைக்கிறான், முன்னாள் தளபதியே என்றும் கூறுகிறான், யாரோ இவன் யாரோ என்று ஐயுற்று விடாதீர், நான் தங்களுடைய முன்னாள் தொண்டன்; தோழன்; அபிமானி; ஆதரவாளன் கூட! இன்றைய "விதவை" சண்முகம் "சுமங்கலி" சண்முகமாக மட்டுமல்ல, "சுயமரியாதை" சண்முகமாகவும் இருந்தாரே ஒரு காலத்தில், ஆர். கே. சண்முகம் என்ற பெயரைக் கேட்டாலே ஆரியம் சிம்ம சொப்பனம் கண்டதைப் போல அலறித் துடித்து அஞ்சி நடுங்கிற்றே ஒரு காலத்தில், சண்முகம் பேசுகிறார் என்றால் சீர்திருத்த வட்டாரம் பேசுகிறது, சுயமரியாதை உலகம் முழக்கமிடுகிறது, பகுத்தறிவுப் பாசறையிலிருந்து அணுக்குண்டு கிளம்புகிறது, என்று நாடு எண்ணி வந்ததே முன்னர் ஓர் நாளில், அந்த நாளிலே தங்களுடைய சீர்திருத்த ஆர்வத்தையும், சுயமரியாதை உணர்ச்சியையும் கண்டு நெஞ்செல்லாம் பூரித்துப்போன ஆயிரமாயிரம் தமிழர்களிலே நானும் ஒருவன்! உம்மாலே சுயமரியாதை ஆர்வங் கொண்டு, உம் பேச்சைக் கேட்டு புரட்சிப் பணியிலே பற்றுக் கொண்டு, உம்முடைய தொண்டாலே பெரியார் பெரும் படையிலே போர்வீரர்களாகத் தம்மைத்தாமே பதிவு செய்து கொண்ட பல்லாயிரவர்களிலே நானும் ஒருவன்! ஆகவே தான் உரிமையோடு அழைக்கிறேன் தோழர் சண்முகமே என்று—கோபித்துக் கொள்ளாதீர்! நீர் எம்மை மறந்துவிட்டீர்- ஆனால் நாங்கள் உம்மை மறக்கவில்லை! நீர் எம்மைப் பலமுறை தாக்கவும் தயாரானீர்—எங்கட்கு உம்மைத் தாக்கிப் பேசவோ மனந் துணியவில்லை! நீர் "சேலம்" மாநாட்டின்போது எம்மைக் காட்டிக் கொடுத்தீர், ஊர் அலர் தூற்றினீர்—என்றாலும் நாங்கள் எம் சுண்டுவிரலையும் அசைத்தோமில்லை உம்மை எதிர்த்து! ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகமாக மாறியபோது, ஜமீன்களும் மிட்டாக்களும் மிராசுகளும் பகதூர்களும் சரிகைத் தலைகளும் சாய்வு நாற்காலிகளும் கட்சியைவிட்டு விரட்டப் பட்டபோது தாங்கள் பாட்டாளிகளாகிய எங்கள் பக்கமே இருப்பீர், திராவிடர் கழகத்தின் முடிசூடா மன்னராக விளங்குவீர், அந்த மாவீரர் பெரியாருக்கு வலதுகரமாக இருந்து பணியாற்றுவீர் என்றெல்லாம் எதிர்பார்த்தோம், ஆனால் ஏமாந்தோம்! எங்கள் பட்டாளத்துத் தளபதியாக நீர் இருப்பீர் என்று நாங்கள் எண்ணிவந்தோம் ஆனால் "சேலம்" எங்களை எதிர்த்துக் கவண்கல் வீசிவந்த பிற்போக்குச் சக்திகள் பக்கமே தாங்கள் புன்னகையுடன் வீற்றிருக்கக் காட்டிற்று, கண்டதும் திகைத்துவிட்டோம்! எந்தப் பெரியார் இராமசாமியை என்னுடைய அருமைக் குரு என்று எண்ணற்ற மேடைகளில் நீர் இறும்பூதுடன் கூறிவந்தீரோ, எந்தப் பெரியார் இராமசாமி தான் தமிழகத்தைத் தட்டி எழுப்பிய புத்துலகச் சிற்பி என்று நீர் பூரிப்புடன் பல்லாயிரம் முறை புகன்று வந்தீரோ, எந்தப் பெரியார் இராமசாமியே பல நூற்றாண்டுகளாகப் பலராலும் சாதிக்க முடியாத காரியங்களை ஓர் ஐந்தே ஆண்டு காலத்தில் அருமையாகச் செய்து முடித்த ஆற்றல் மிக்க பெருந் தலைவர் என்று நீர் அடிக்கடி எழுதிவந்தீரோ, எந்தப் பெரியார் இராமசாமியின் கொள்கைகளை மட்டும்தான் நான் எழுத்துக்கு எழுத்து அப்படி அப்படியே ஒப்புக்கொள்ள முடியும் என்று பேசிவந்தீரோ, அதே பெரியார் இராமசாமியைத் தான், அவருடைய இலட்சியக் கோட்டைகளைத் தான், அவருடைய அரும்பெரும் பட்டாளத்தைத்தான், அவருடைய கூட்டுத் தோழர்களின் திராவிடர் கழக அமைப்புப் பணியைத்தான் சேலம் மாநாட்டின்போது எதிர்த்து நின்றீர் நீர், எதிர்த்து மட்டுமா நின்றீர் நீர், எதிர்த்து நின்றவர் தம் படைவரிசைக்குத் தலைமை தாங்கியும் நின்றீர்! நீர் நின்ற இக் கோலத்தைக் கண்டு நாங்கள் அந்நாளில் கண்ணீர் சிந்தினோமே தவிர, நம் வீர சண்முகமா இவ்வளவு தாழ்ந்து போனார் என்று நினைத்து நினைத்து உள்ளம் வருந்தினோமே தவிர, அதிதீவிர சுயமரியாதைக்காரராக இருந்த சண்முகமா இன்று சுயநலத் துருத்திகள் பக்கமும் பட்டம் பதவிப் பித்தர்கள் பக்கமும் நிற்கிறார்—கொடுமை கொடுமை என்று கூறி உள்ளம் உருகி நின்றோமே தவிர உம்மைத் தாக்க மட்டும் எங்கட்கு அந்நிலையிலும் மனம்

வரவில்லை! "நான் ஓர் இந்து என்று கூறிக் கொள்வதில் பெருமைப் படுகிறேன்" என்று கூட ஒரு சமயம் நீர் கூறிவிட்டீர், அமெரிக்காவிலிருந்து திரும்பியபோது தங்கத்தால் சிறிய ஆகாயவிமானம் செய்து ஆபத்தின்றி ஆகாய விமானத்தில் திரும்பியதற்காக அதை ஆரிய ஆணழகர்க்குத் தானமும் செய்தீர், பெரியாராம் பெரியார் கிடக்கிறாரய்யா அவர் என்று சொல்லக்கூட ஆரம்பித்தீர், இவ்வளவுக்கும் நாங்கள், என்ன இருந்தாலுமே, நம் சண்முகத்திற்கு இவ்வளவு பேத புத்தி ஆகுமோ என்றுதான் எண்ணி வருந்தினோமே தவிர உம்முடன் மற்போருக்குவந்தோமில்லை, களத்திலேஉம்மைவீழ்த்த வேண்டும் என்ற கொடுநினைப்பும் கொண்டோமில்லை. பிறகு நீர் ஜவஹர் சர்க்காரிலே ஒரு மந்திரியானீர், திராவிடஸ்தான் கேட்பது அபத்தம் என்றும் பேசலானீர், முன்னாளில் தென்னாடு பிரியத்தான் வேண்டும் என்று நீர் பேசியதையெல்லாம் மறுக்கலானீர், ஐயோ பாவம் நீர் அந்த அமைச்சர் பதவியைச் சதம் என்றெண்ணிக் கொண்டு உம் முன்னாள் கொள்கைகளை நீரே தாக்கித் தகர்க்கலானீர்! தாக்கிக் கொண்டு போகட்டும், இவர் தாக்குவதால் நம் கொள்கைகள் என்ன தகர்ந்தா போய்விடும், நம்மைத் தாக்குவதன் மூலம் இவருக்கு அமைச்சர் பதவி நிரந்தரமாக ஆவதானால் தாக்கிக் கொண்டுதான் போகட்டுமே என்றுதான் நாங்கள் அப்போதும் சும்மா இருந்தோம், ஆனால் மாஜி நண்பரே, அந்த வடநாட்டு வம்பர்கள் ஈவு இரக்கமின்றி ஏதோ ஒரு போலிக் குற்றச் சாட்டைக் கூறி இறுதியில் உம்மைப்படுபாதாளத்தில்தள்ளி அரசியல் விதவைக் கோலம் பூணச் செய்தனரே, அதை எண்ணினால்தான் இப்போதும் எங்கள் உள்ளம் குமுறுகிறது! அந்தோ நம் சண்முகத்திற்கா இந்தக் கதி என்று எண்ணி மனம் மிக மிக வருந்துகிறது!

மந்திரி பதவி போனால் என்ன, மக்கட்குப் பணி புரியும் மகத்தான பதவி என்றும் உண்டே, ஏன் அதனைச் சண்முகனார் ஏற்கக்கூடாது, ஏன் சமுதாயப்பணி புரிய சண்முகம் துணிந்து இறங்கக் கூடாது, ஏன் கோவைக் குமரன் முன்னர் ஓர் காலத்தில் அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த சுயமரியாதைச் சூறாவளிப் பிரசாரத்தில் மீண்டும் இறங்கி, இடைக் காலத்தில் தான் செய்த பாவங்கட்கெல்லாம் பிராயச்சித்தம் தேடிக்கொள்ளக்கூடாது என்றெல்லாம் இந்த மூன்று நான்கு மாத காலமாகவே நான் அடிக்கடி எண்ணிப் பார்ப்பதுண்டு ஆனால் அதே நேரத்தில், பட்டமரம் துளிர்ப்பதேது, பாலைவனம் பூஞ்சோலையாவது ஏது, அமாவாசை இரவில் முழுநிலவு எப்படிப் பிறக்கும், மாண்டவன் மீள்வதெப்படி, முதலாளி சண்முகனார் சுயமரியாதை சண்முகமாக ஆவதென்ன எளிதான காரியமா என்று என் மனமே எனக்குக் கூறும்! இத்தகு மனப் போராட்டத்தில் என் இதயம் சிக்கிக்கொண்டிருந்த நேரத்தில் தான் தங்களுடைய திருச்சிச் சொற்பொழிவு வந்தது. ஓரளவு உள்ளம் களித்தேன். கண்ணுக் கெட்டிய தூரம் வெறும் மணல்காடாக இருக்கும் பாலைவனத்திலே திடீரென்று ஓர் இடத்தில் ஒரு சிறு நீரோடை காணப்பட்டால் எப்படி இருக்குமோ, இருள் நிறைந்த வானத்தில் சட்டென்று ஒரு மின்னல் தோன்றி, பளீர் என்று ஒளி வீசி, திடுக்கென்று மறைந்துவிட்டால் எப்படி இருக்குமோ, அப்படித்தான் இருந்தது எனக்கு தங்களுடைய இந்த அண்மைக்கால நீண்ட இருண்ட வாழ்க்கையிலே, அன்று, திடீரென்று, சிறந்த, செவ்விய, அழகிய, பேச்சின் ஒளி ஒன்று ஊடுருவிப் பாய்ந்து சென்ற அரிய-காட்சி!

18-4-49 அன்று, திருச்சி மாவீரர் பி. ஆர். தேவர் படத்தைத் திறந்து வைத்த ஞான்று, "தேசீய மொழியாக இந்தி வந்தால் நமது தாய் மொழியான தமிழ் கெடும் என இந்தியை எதிர்ப்பவர்கள் பயப்படுகிறார்கள்-அவர்கள் பயப்படுவதற்கு நியாயம் இருக்கிறது" என்றும், "ஒரு மொழியை நாட்டு மொழியாக ஆக்க வேண்டுமானால் சில முக்கியமான அம்சங்களைக் குறித்து முடிவு செய்யப்பட வேண்டும். அதாவது அப்பொது மொழி எப்படி இருக்க வேண்டும், எங்குப் பேசப்பட வேண்டும், அதை இந்திய மக்கள் எல்லோரும் பேசவேண்டுமா, அல்லது அரசாங்க மொழியாக மட்டும் இருக்க வேண்டுமா என்பன போன்ற அம்சங்கள் விளக்கப்பட வேண்டும். ஆனால் அவை விளக்கப்படவில்லை" என்றும், "இப்பொழுது ஆங்கிலமிருந்து வருவதுபோல, இந்தி அரசியலாளர் மொழியாக மட்டும் இருப்பதானால், அந்தந்த மாகாணத்திலிருந்து செல்லும் தூதுவர்கள் மட்டும் அம்மொழியைக் கற்றுக் கொண்டால் போதாதா, ஏன் இந்நாட்டில் உள்ள மக்கள் எல்லாரும் படிக்கவேண்டும்?" என்றும், "இப்போதுதான் நான் தமிழ் வளர்ச்சிக் கழக மாநாட்டிலிருந்து வருகிறேன். அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, ஜெர்மனி போன்ற நாடுகளில் எங்காவது அவர்கள் தங்கள் தாய் மொழி வளர்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவி இருக்கிறார்களா? ஏன் இந்நாட்டில் மட்டும்

(5-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கைநெசவுத் தொழில், தென்னிந்தியாவில் உள்ள மிக முக்கியமான தொழில், தமிழகத்தின் தலைமைத் தொழில், உழவுத் தொழிலுக்கு அடுத்து நாட்டின் உயிர்நாடி போல் உள்ள தொழில், அத்தகைய தொழில் இன்று வேகவேகமாக மரணப் படுகுழியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது — என்றாலும் நாட்டிலே இந்த வேதனை மிகு பிரச்சினைக்குக் காட்டப்பட வேண்டிய முக்கியத்துவம் சிறிதும் காட்டப்படவில்லை. சுண்டைக்காய் பிரச்சினைகளையெல்லாம் இமாலயப் பிரச்சினைகளாக்கிக் காட்டும் காங்கிரஸ் சர்க்கார், பாஞ்சால அகதிகளைக் குறித்து காலம் நேரம் இன்றிக் கதறி அழும் காங்கிரஸ் சர்க்கார், காஷ்மீர் தொல்லையைக் குறித்தும் பாகிஸ்தான் ''விஷமப் பிரசாரம்'' குறித்தும் வேளைக்கு வேளை விதவிதமான வர்ணனைச் சொற்களை வாரி வீசியவண்ணம் இருக்கும் காங்கிரஸ் சர்க்கார், ஒரு கட்சியின் தியாகிகட்கு மட்டும் ஐந்து ஏகர் நிலம் அளிப்பதிலே அவசர அவசரமாக முனைந்துள்ள ஆர்ப்பாட்ட சர்க்கார், இந்த மிக முதன்மையான பிரச்சினையிலே மட்டும் கேளாக் காதினராக இருக்கின்றனர். முப்பது இலட்சம் பேரின் வாழ்க்கை இன்று வேதனைத் தீயிலே வெந்து கருகுகிறது—அந்த வேதனைத் தீயை அணைக்க வேண்டுமே என்ற கவலை அணுவளவும் காணோம் காங்கிரஸ் சர்க்காருக்கு! ஆயிரமாயிரம் நெசவாளர்கள் இன்று இருப்பதா இறப்பதா என்கிற வாழ்க்கையின் கடைசிப் படிக்கட்டிலே நின்றுகொண்டு கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கிறார்கள்—அந்தக் கண்ணீரைத் துடைக்க வேண்டுமே என்ற கனிவு, இரக்கம், மனிதாபிமானம் கூட இல்லை இந்த ''நம்ம சர்க்கார்''ருக்கு! அழகான தறியின் ஒலி ஆநந்த கீதம் போல் கேட்டுக் கொண்டிருந்த இல்லத்தில் எல்லாம் பச்சைப் பிள்ளைகள் பாலும் உணவின்றிப் பதறி அழுகின்ற பரிதாப ஒலிதான் கேட்கிறது—என்றாலும் இந்த அஹிம்சாவாதிகளின் அற்புத சர்க்கார் அந்தப் பரிதாப நிலைமையை மாற்ற வேண்டாமா என்[illegible]ணியும் பார்க்கவில்லை. மூன்று மாதங்கட்கு முன்னால் நெசவாளர் பிரச்சினையைப் பற்றி எழுதி இருந்த போதும் குறிப்பிட்டோம், இப்போதும் குறிப்பிட ஆசைப்படுகிறோம், **நெசவாளர்களின் வாழ்க்கை வானிலே இன்று வறுமை இருள் கவிந்து கொண்டிருப்பதற்கு இந்த காங்கிரஸ் சர்க்கார் கொண்டுள்ள கபோதித்தனமான போக்குத்தான் காரணமே தவிர வேறில்லை**—இதை ஆயிரமாயிரம் மேடைகளிலிருந்து கூறச்சொன்னாலும் கூறத் தயங்கோம், ஆளவந்தார்களின் அதிகார ஈட்டியை நம் மார்புக்கு முன்னே நீட்டிக் காட்டிக் கேட்டாலும் இதைக் கூறச் சிறிதும் அஞ்சோம். உண்மை! அதை உரைக்க நாம் ஏன் அஞ்ச வேண்டும்?

''ஆமாம்! இந்தக் கருப்புச் சட்டைக்காரர்களின் குணமே இது தானே! எப்போது பார்த்தாலும் நம்ப சர்க்காரைக் குற்றம் சொல்வதுதான் இந்தக் குண்டுணிகளுக்கு வேலை! நெசவாளர்களின் பரிதாப நிலைமைக்குக்கூட இந்த சர்க்கார் தான் காரணமாம்! செ! செ! என்னதான் எதிர்க்கட்சியாய் இருந்தாலும் இப்படியா தூற்றுவது நாடாளும் சர்க்காரை! நெசவாளர்க்ள் பட்டினியால் பரிதவித்தால் அதற்கு சர்க்கார் என்ன செய்யும் பாவம்!'' என்று சிலராவது கூறக் கூடும் இத்தலையங்கத்தைப் படித்து விட்டு! நாம் வேற்றுக் கட்சியினர்! எனவே சர்க்காரை எப்படியாவது குறைகூறவேண்டும் என்ற கருத்துடையவர்கள். எனவே கட்சி மாச்சரியத்தின் காரணமாகத்தான் இப்படிக் கூறுகிறோம் என்று அவர்கள் உண்மையிலேயே எண்ணவும் கூடும். அப்படிப்பட்ட ஐயமுடையவர்கள் இதோ உள்ள வாசகங்களைப் படிக்கட்டும்:—

**''இன்று நெசவாளர்களின் நிலைமை ரொம்ப ரொம்ப மோசமாகி வருகிறது. இந்திய தேசீயத் தொழிலில் முக்கியமாக உள்ள கைத்தறி நெசவுத் தொழில் இவ்வளவு மோசமான நிலைக்குப் போய் இருப்பது ரொம்ப வருந்தத் தக்கது. நெசவாளர்கள் படும் கஷ்டத்தைப்பற்றி வரும் செய்திகள், கடிதங்கள், ரொம்பப் பரிதாபமாக இருக்கின்றன.''**

''விடுதலை'' இதழிலே இரண்டு வாரங்களுக்கு முன்னால் கைத்தறி நெசவாளர் படும் துயரத்தைப் பற்றி தலையங்கம் எழுதி இருந்தார்களே, அந்தத் தலையங்கத்திலிருந்து கத்திரித்து எடுக்கப்பட்ட ஒரு துண்டு—அல்ல இது! **காண்டீபம்** என்பதாக ஒரு முக்கியமான காங்கிரஸ் ஏடு இருக்கிறதல்லவா, ''தினசரி'' அலுவலகத்திலிருந்து வெளிவரும் ''தினசரி''யின் குட்டிப் பத்திரிகை, அந்தப் பத்திரிகையிலே காணப்படும் வாசகம்தான் இது! நெசவாளர்களின் நிலைமை மோசமாக இருக்கிறது என்றுதான் கூறத் தெரிகிறது நமக்கு! ஆனால் காங்கிரஸ் ஏடு **காண்டீபம்,** அதற்கென்றே அமைந்த ''தனித் தமிழ்'' நடையில் கூறுகிறது, நெசவாளர்களின் நிலைமை **ரொம்ப ரொம்ப** மோசமாக இருக்கிறது என்று! நெசவாளரின் நிலைமை மோசமாக இருக்கிறது என்று மட்டும்தான் காண்டீபத்தின் ஆசிரியர் முதலிலே எழுதி இருப்பார். பிறகு, பட்டினியால் வாடும் ஏழை நெசவாளரின் பரிதாப முகம் அவர் மனக் கண் முன்னே தோன்றி இருக்கும், பிறகு இவ்வளவு வேதனை தோய்ந்த முகத்திலே படிந்திருக்கும் அளவு கடந்த துக்கத்தைக் காட்ட ''நெசவாளரின் நிலைமை மோசமாக இருக்கிறது'' என்று மட்டும் எழுதினால் போதாது, அது நிலைமையைச் சரியாகப் படம் பிடித்துக் காட்டியதாக ஆகாது என்று நினைத்திருப்பார், நினைத்ததும் ''நெசவாளரின் நிலைமை **மோசமாக இருக்கிறது**'' என்று மட்டும் எழுதியவர், பிறகு, **ரொம்ப மோசமாக இருக்கிறது.** என்று அடித்து எழுதி இருப்பார். எழுதிய பிறகு, மறுபடியும், வேதனை தோய்ந்த நெசவாளனின் முகம் அவர் உள்ளத் திரையிலே வந்து நின்றிருக்கும். அந்த உள்ளம் உருக்கும் காட்சியை ஒருமுறை கண்டுவிட்டு தாம் திருத்தி எழுதிய வாசகத்தை காண்டிபம் ஆசிரியர் கண்டிருப்பார்-கண்டதும் ''**நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது**'' என்ற வாசகத்தால்கூட நெசவாளனின் நிலைமையில் உள்ள பரிதாபம் முற்றமுடிய எடுத்துக் காட்டப்படவில்லை என்பது தெரிந்திருக்கும். பிறகுதான் அந்த வாசகத்தை ''**நிலைமை ரொம்ப ரொம்ப மோசமாக இருக்கிறது**'' என்று மறுபடியும் மாற்றி எழுதி இருப்பார். நெசவாளரின் நிலைமை ரொம்ப ரொம்ப மோசமாக இருக்கிறது என்று எழுதியதோடு நிற்கவில்லை **காண்டீபம்** இதழாசிரியர், இத்தகைய நிலை ஏற்பட்டது குறித்து வருந்துகிறார் வருந்துகிறபோதும் கொஞ்

மாகவா வருந்துகிறார், இல்லை இல்லை! **ரொம்ப** வருந்துகிறார்! பிறகு அவருக்கு நெசவாளருடைய நிலைமையை விளக்கி கடிதங்களும் செய்திகளும் வருகின்றன! அந்தக் கடிதங்களையும் செய்திகளையும் காண்கிறார், பரிதாபப்படுகிறார். பரிதாபப்படுகிறார் என்றால் சாதாரணமாகப் பரிதாபப்படவில்லை! **ரொம்பப்** பரிதாபப்படுகிறார். உண்மையிலேயே நெசவாளர்கள் இன்றுள்ள **ரொம்ப ரொம்ப மோசமான நிலைமையைக்** கண்டால் காண்டிபம் ஆசிரியருக்கு மட்டுமா எவருக்குமே **ரொம்ப வருத்தமும் ரொம்பப் பரிதாபமும்** ஏற்படத்தான் செய்யும்.

நம் நாட்டு நெசவாளரின் பரிதாபக் கதையை நாம் எடுத்துக்கூறினால் நம்மை சர்க்கார் துவேஷிகள் என்று சுலபமாகத் தூற்றிவிட முடிகிறது நாம் எடுத்துக்கூறும் உண்மையை ஒப்புக்கொள்ளத் தைரியம் அற்றவர்களால்! ஆனால் காண்டிபம், காங்கிரஸ் இதழ்; அதுவும் சாதாரண காங்கிரஸ் இதழ் கூட அல்ல, அதிதீவிரமான காங்கிரஸ் இதழ், அத்தகு இதழ் கூறுகிறது நெசவாளர்களின் நிலைமை ரொம்ப ரொம்ப மோசமாகி வருகிறது என்று! இதற்கென்ன கூறுகிறார்கள் நம்மை சர்க்கார் துவேஷிகள் என்று பட்டாபிஷேகம் செய்பவர்கள்!

“நிறுத்துமய்யா நிறுத்தும்! ஏதோ துரும்பை எடுத்து வைத்துக்கொண்டு தூணாக்கிக் காட்டுகிறீரே? காண்டிபம் என்னய்யா கூறிவிட்டது நீர் கூறுவதைப் போல! நெசவாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள் — இது பரிதாபகரமான நிலை என்று கூறிற்றே தவிர இந்த நிலை நேரிட்டதற்குக் காரணம் சர்க்கார்தான் என்று உம்மைப்போல நாக்கில் நரம்பின்றிக் கூறவில்லையே! நெசவாளர்கள் பட்டினி கிடக்கவில்லை என்று நாங்கள் கூறுகிறோம்! பட்டினிதான் கிடக்கிறார்கள்! ஆனால் அதற்குக் காரணம் நம்ம சர்க்கார் என்று பேசுகிறீரே பேதபுத்தி கொண்டு, அதுதானே கூடாது!” என்று மடமட வென்று பேசக்கூடும் காங்கிரஸ்காரர்கள் நாம் மேல் எடுத்துக் காட்டியதைப் படித்ததும்! அவர்களுக்கு நாம் பணிவுடனும் அன்புடனும் கூற ஆசைப்படுகிறோம், அவசரப்படாதீர்கள் அருமை நண்பர்களே, **காண்டிபத்தின் கணைகள் மேலும் உண்டு, காண்மின்!**

**காண்டிபம்** கூறுகிறது:— “கைத்தறி நெசவாளரின் ஜவுளி உற்பத்தி இன்றுள்ள நிலையில் ரொம்பக் குறைந்து விட்டது. ஏனெனில் நூல் கிடைக்காமலும் தொழில் கிடைக்காமலும் **இத்தொழிலாளர் பட்டினி கிடக்கிறார்கள். இதற்கு சர்க்காரின் வழ வழாக் கொள்கைதான் காரணம்.**

சர்க்காரின் வழவழாக் கொள்கைதான் காரணமாம் நெசவாளர்கள் பட்டினி கிடப்பதற்கு! காண்டிபம்” தெளிவாகக் கூறியிருக்கிறது இந்த வாரம் மூன்று மாதங்கட்கு முன்னர் நாம் கூறிய அதே உண்மையை! என்றாலும் நமக்குப் பெயர் “சர்க்கார் துவேஷி!” காண்டிபத்திற்குப் பெயர் “கண்ணியமுள்ள தேசபக்த ஏடு”!

“இன்று நெசவாளர்களின் நிலைமை ரொம்ப ரொம்ப மோசமாக இருக்கிறது”—காண்டிபத்தின் முதல் கணை!

“இந்திய தேசியத் தொழிலில் முக்கியமாக உள்ள கைத்தறி நெசவுத் தொழில் இவ்வளவு மோசமான நிலைக்குப் போய் இருப்பது ரொம்ப வருந்தத்தக்கது.”—காண்டிபத்திலிருந்து தெறித்து வீழ்ந்த இரண்டாவது கணை இது!

“நெசவாளர்கள் படும் கஷ்டத்தைப் பற்றி வரும் செய்திகள் கடிதங்கள், ரொம்ப பரிதாபமாக இருக்கின்றன!” இது, தேசிய காண்டிபத்திலிருந்து பறந்தோடி வந்த மூன்றாவது அம்பு!

“நூல் கிடைக்காமலும் தொழில் கிடைக்காமலும் நெசவுத் தொழிலாளர் பட்டினி கிடப்பதற்கு சர்க்காரின் வழவழாக் கொள்கைதான் காரணம்.”—காண்டிபம் கடைசி கடைசியாக எடுத்து வீசியிருக்கின்ற மிக முக்கியமான கணை, தேசிய சர்க்கார் என்றும் பொது ஜன சர்க்கார் என்றும் பொக்கம் பேசிக்கொள்ளும் ஜவஹர் சர்க்காரின் இருதயத்தின்மீதே நேராக வீசப்பட்டிருக்கின்ற கணை, இது! கணை சூனாமானா அம்பறாத் தூணியிலிருந்து பிறக்கவில்லை! திராவிடர் கழக வில்லிருந்தும் தெறித்து விழவில்லை! காங்கிரஸ் காண்டிபத்திலிருந்தே பிறந்திருக்கிறது. எனவே நம்ம சர்க்காரைக் கவிழ்க்கவேண்டும் என்ற குறுகிய நோக்கத்தோடு கருப்புச் சட்டைகள் போடும் காட்டுக் கூச்சல்கள் இவை என்று எந்த மந்த மதியினரும் கூறமுடியாது. **“காண்டிபம்” சர்க்காரைத் தாக்கும் ஏடல்ல! தாங்கும் ஏடு!** அந்த ஏட்டிலேயே, சர்க்கார்தான் நெசவாளர்களைப் பட்டினி கிடக்கும்படி செய்தவர்கள் என்னும் பயங்கரக் குற்றச்சாட்டு காணப்படுமானால், உண்மையிலேயே சர்க்கார் செய்த குற்றம் அவ்வளவு அதிகம் என்று அர்த்தம்! அதிலும் காண்டிபம் அடிக்கடி சர்க்காரைத் தாக்கி எழுதி எழுதிப் பழகிப்போன ஏடுமல்ல—சர்க்காரின் தவறுகளை சீலைபோட்டு மூடிவைப்பதே அதன் வழக்கமான வேலை! சர்க்காரின் கெஜட்டு என்று பெயர் காண்டிபத்திற்கு! அதாவது சர்க்காரின் கிராமபோன் ப்ளேட் அது என்று அர்த்தம்! அத்தகைய பரம விபீஷண ஏட்டிலே, இத்தகைய கர்ணகடூரமான குற்றச்சாட்டு! வாதியின் வக்கீலே வாதிமீது குற்றப்பத்திரிகை வாசிக்கிறார் என்றால் வாதியின் குற்றம் எவ்வளவு பிரம்மாண்டமானதாக இருக்க வேண்டும்! தந்தையின் பாபகாரியத்தைத் தனயனே ஊருக்கெல்லாம் எடுத்துக் கூறத் தொடங்கிவிட்டான் எனில் தந்தையின் “பாபச் செயல்” மாபாவிகளையும் நடுங்கவைக்கும் அளவு அக்கிரமம் நிறைந்ததாகத் தானே இருக்கவேண்டும்!

“ஒரு நாட்டிலே, சர்க்கார், 30 இலட்சம் பேர் பட்டினி கிடப்பதைத் தடுக்க முடியவில்லை—அவர்களின் பட்டினியைப் போக்குவதற்கான திட்டங்கள் தீட்டி, வழிமுறைகள் வகுத்து, பட்டினியை உடனடியாகப் போக்கவேண்டும் என்ற எண்ணம்கூட ஏற்படவில்லை சர்க்காருக்கு” என்று சொல்லப்பட்டாலே, அதைவிட அவமானம், ஒரு சர்க்காருக்கு வேறு இருக்கத் தேவையில்லை! “ஒரு நாட்டிலே முப்பது இலட்சம் பேர் பட்டினிகிடக்கின்றனர்-கிடக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது” என்று கேள்விப்பட்டால், அந்த நாட்டில் ஆட்சிப் பீடத்தை அலங்கரிப்பவர்கள் வெறும் கொலுப் பொம்மைகளே தவிர நாடாளத் தெரியாதவர்கள் என்று நல்லறிவாளர்கள் எவரும் கூறிவிடுவர். ஆனால் இந்த சமதர்ம வீரர் ஜவஹர்லால் சர்க்கார் மீதோ இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நாட்டு மக்களில் 30 இலட்சம் பேர் பட்டினி கிடக்

கிறார்கள் என்ற குற்றச் சாட்டு மட்டுமல்ல, அவர்கள் பட்டினி கிடப்பதற்குக் காரணமே இந்த சர்க்கார்தான் என்று — எதிர்க் கட்சி ஏடல்ல — அட்டைப் படத்திலே பண்டித நேருவின் அலங்கார உருவத்தை அழகான முறையிலே அச்சிட்டு ஆனந்தத்துடன் வெளியிடும் ஆகஸ்டு தியாகிகளின் ஏடு "காண்டீபம்" கூறுகிறது—ஒரு சர்க்காருக்கு இதைவிட மானக் கேடு வேறென்ன வேண்டும்?

முப்பது இலட்சம் பேர் பட்டினி கிடக்கின்றனர் நாட்டில்! பசியின் கொடுமை அவர்களை எலும்புக் கூடுகளாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்து கொண்டிருக்கிறது! பஞ்சம் அவர்கள் வீட்டுக் கதவை வந்து தட்டிக் கொண்டிருக்கிறது! வேதனையின் பிம்பங்களாக, செத்த வாழ்வு வாழும் நடைப்பிணங்களாக, உணர்ச்சியும் உயிரும் அற்ற உருவங்களாக உலவிக் கொண்டிருக்கின்றனர் உழைத்து உழைத்து உருக்குலைந்துங்கூட உண்ண உணவும் வாழ வழியும் இன்றித் தவிக்கும் அந்த உத்தமர்கள்! இந்தப் பட்டினியும் பசியும் பஞ்சமும் இன்றி வாழ்ந்துவந்தனர் போர்க் காலத்தில்! இன்றோ அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு சோக சித்திரமாக, துக்கம் என்பதின் ஒவ்வொரு அடையாளமாக, ஒவ்வொருவரும் ஒரு நடமாடும் பாலைவனமாக இருக்கின்றனர்! இருக்கின்றனரா, இல்லை! இருக்கும்படி செய்யப் பட்டுவிட்டனர் — இந்த காங்கிரஸ் சர்க்காரால் — காண்டிபம் என்னும் காங்கிரஸ் ஏடு கூறுகிறபடி!

வானிலே வெண்ணிலா வட்டமிட, கடலிலே அலை ஓசை எழுந்து விழ, ஓசைசெயும் அலைகள் எலாம் நிலவொளியில் புதுமலர்ச்சியும் புது நிறமும் புது வடிவமும் புது எழிலும் பெற்றுப் பொலிய, இந்த இயற்கை இன்பத்தின் மீது மிதந்து கொண்டே, படகு, சங்ககாலச் செய்யுள் போல இனிமையாகப் பயணம் செய்து கொண்டிருந்த போது, திடீரெனப் பெரும் புயல் தோன்றி, கார் இருள் பரவி, பயங்கரச் சூழ்நிலை ஏற்பட்டதைப் போலத்தான் நெசவுத் தொழிலாளர் வாழ்க்கையும், ஓரளவு வசதியாகவும் சிறிதளவு இன்பமயமாகவும் சற்று நிம்மதியாகவும் சென்ற போரின்போது நடந்துகொண்டிருந்தது இந்நாளில் துக்கபுரியில் புகுந்து பட்டினிப் பாதையில் நடந்து வேதனைப் பண் பாடிய வண்ணம் உலவ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நேரிட்டுவிட்டது. அதுவும் அண்ணல் மகாத்மாவின் அற்புத சீடர்களின் அரசாட்சி கையாண்ட "வழவழாக் "கொள்கையாலேயே!

பட்டினிப் புயலில் சிக்கிய படகாகிவிட்டது நெசவாளர் வாழ்க்கை! புயல் அதிகரிக்கிறது. விநாடிக்கு விநாடி அதன் சுழல் மேலும் மேலும் பயங்கரமானதாக மாறுகிறது, அதோ படகு கவிழ ஆரம்பிக்கிறது, இன்னும் ஒரு விநாடிதான் பாக்கி, அதற்குள் சர்க்கார் முன்வந்து, அற்புதமான உதவியைச் செய்து, கவிழும் படகைக் காப்பாற்றி, முப்பது இலட்சம் மக்களுக்கும் வாழும் வழியைத் தரப்போகிறார்களா, அல்லது, "எந்தப் படகு எப்படிக் கவிழ்ந்தால் எமக்கென்ன—டாடாக்கள் பிர்லாக்கள் டால்மியாக்கள் கோயங்காக்கள் என்னும் பிரம்மாண்டமான கப்பல்களுக்குப் பூசப்பட்டிருக்கும் சாயம் கொஞ்சம் வெளுத்துவிட்டது, அதனை மறு சாயம் பூச வேண்டிய அவசரமான வேலை எங்கட்கிருக்கிறது! அதனை முதலில் கவனித்து விட்டுத்தான் மறுவேலை!" என்று கூறும் முதலாளித்துவ சரணாகதி மனப்பான்மையிலேயே நடந்து கொள்ளப் போகிறார்களா? என்ன செய்யப் போகிறார்கள்?

ஒரே ஒரு விநாடிதான் இருக்கிறது படகைக் காப்பாற்ற! யோசித்துப் பார்ப்பதற்கோ, செலக்ட் கமிட்டிகளை அமைத்து சர்வ நிதானமாக ஆலோசனைகளைச் செய்து பார்த்து, அதன் பிறகு உதவி செய்வதற்கோ, நிபுணர்கள் குழுவை அமைத்து எப்படி உதவலாம் இத்தொழிலுக்கு என்று அவர்களைக் கேட்க, அவர்கள் அதற்கு ஆயிரமாயிரம் புத்தகங்களைத் தருவி, ஆறுமாதங்களுக்குப் பிறகு, நடைமுறைக்கு ஒவ்வாத ஏதோ குருட்டுத் திட்டங்களை வகுக்க, அதன்பிறகு சர்க்கார் ஆர அமர அமைதியாக இருந்து ஒத்தாசை புரிவதற்கோ, இப்போது நேரமில்லை! இப்போது இருப்பதெல்லாம் ஒரே ஒரு விநாடி! அந்த விநாடி தப்பினால் படகு பாறையில் மோதுமோ, சுக்கு நூறாகுமோ கடலில் கவிழுமோ—நமக்குத் தெரியாது!

புயலில் சிக்கிய படகு தன்னைக் காப்பாற்றும்படி கூவி அழைக்கிறது. சர்க்காரை! தன்னைப் புயலில் சிக்கவைத்த சர்க்காரை!

சர்க்கார் என்ன செய்யப் போகிறது? துணை செய்யுமா? செய்யுமா? ஒரு விநாடிக்குள் உதவி கிடைக்குமா?

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வாசனை காரணமாக, விட்ட குறை தொட்டகுறை என்பது போலப் பேசியிருக்கிறீரா, அல்லது உண்மையிலேயே மனம் மாறி இடைக்காலத்தில் நடந்துசென்ற கோணல் பாதையில் இனியும் செல்லக்கூடாது, பழைய நேர்வழியான ஈரோட்டுப் பாதையிலேயே செல்ல வேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டு இதைக் கூறி இருக்கிறீரா? முடியுமானால், மனம் இருந்தால், பதில் எழுதுங்கள். இல்லையானால் வேண்டாம்! வீண் சிரமம் தங்களுக்கு ஏன்? ஆனால் ஒன்று! ஒரு நாள் ஒரு பொழுதாகிலும், உண்மையை உரைத்திருக்கிறீரே, ஒரே ஒரு நாளாவது பழைய சுயமரியாதை சண்முகமாக ஒளி வீச இருக்கிறீரே, அதுவரையில் எனக்கு மகிழ்ச்சிதான்! தங்கட்கு நன்றிகூட!

இங்ஙனம்,

தங்கள் முன்னாள் வீரத்தைக் கண்டு பெருமிதமும், இடைக்கால வீழ்ச்சியைக் கண்டு, வெட்கமும், இந்த வாரத்துத் திருச்சிப் பேச்சைக் கண்டு பூரிப்பும் கொள்ளும்,

தங்கள் மாஜி தொண்டன்,

தூஜமாஜ.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)